**வலிகாமம் வடக்கு பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் இன் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1 ஆம் பந்தியிலுள்ள (அ) அவதானிப்பு நீங்கலாக கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு உடமையான ரூபா 886,000 பெறுமதியான 02 காணிகள் மற்றும் பொதுமண்டபம், மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்ட ரூபா 6,665,000 மூலதன அபிவிருத்தி வேலைகள் மற்றும் உள்@ராட்சித்திணைக்களம் வடக்கு மாகாணத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ரூபா 276,070 பொறிகள் மற்றும் இயந்திரம் என்பன நிதிக்கூற்றில் மூலதன மாக்கப்படாமையால் குறித்த பெறுமதியினால் நடைமுறையல்லாச் சொத்து மற்றும் மூலதன அரசிறை உதவு தொகை என்பன குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக உரிய காலப்பகுதிகளில் வெளிப்படுத்தல் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன் குறித்த பெறுமதிகளினை நிலையான சொத்தாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையின் பெயரிற்கு உடமை மாற்றம் செய்யப்பட்டிருக்காத 04 வாகனங்களின் பெறுமதி ரூபா 1,211,040 நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் நடைமுறையல்லாச் சொத்து மற்றும் மூலதன அரசிறை உதவு தொகை என்பன அப்பெறுமதியினால் அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | சபையின் 04 வாகனங்களின் பெறுமதி ரூபா 1,211,040 சபையின் பெயரிற்கு உடமை மாற்றம் செய்யப்பட்டிராத போதும் குறித்த பெறுமதியினால் நடைமுறையல்லாச் சொத்து மற்றும் மூலதன அரசிறை உதவுதொகை போன்றனவற்றின் பெறுமதி அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது தொடர்பில், மேற்படி வாகனங்கள் யாவும் வடக்கு கிழக்கு மாகாண சபையினால் | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி பதிவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த தவறுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்பட்டவையாகும். இவற்றிற்கான ஆவணங்கள் எவையும் இல்லாதமையினால் உரிமை மாற்றம் செய்யமுடியாத நிலையில் உள்ளது. | |
| (இ) | மீளாய்வாண்டில் சபையினால் ரூபா 10,587,137 பெறுமதியான 04 வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படாத போதிலும் அவற்றின் மதிப்பீடு மற்றும் ஒப்பந்த பெறுமதிகளின் அடிப்படையில் செயலாளரின் பதவிப்பெயரில் உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றில் செலவிலும் கூடிய வருமானம் குறைத்தும் நடைமுறைப் பொறுப்பு அதிகரித்தும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | மேற்படி ரூபா 10,587,137 பெறுமதியான 04 வேலைத்திட்டங்களும் குறித்த ஆண்டிற்கான செலவினங்களினை அவ்நிதியாண்டு செலவினங்களிற்குள் உள்ளடக்கும் நோக்கில் (அட்டுறு எண்ணக்கரு அடிப்படையில்) சென்மதியாக 31.12.2021 இல் ஏற்பாடு செய்து வைக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்படும். | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி பதிவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த தவறுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | சபைக்கு சொந்தமான 36 எண்ணிக்கையான காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளில் சேர்க்கப் பட்டிருக்காமையினால் நிதிக் கூற்றில் நடைமுறையல்லாச் சொத்து மற்றும் மூலதன அரசிறை உதவு தொகை என்பன குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான 36 காணிகள் தொடர்பில் நில அளவைத்திணைக்களத்தினால் நில அளவை செய்யப்பட்டு காணிகளின் பெறுமதியினை மதிப்பிடப்பட்டு கணக்குகளில் உள்வாங்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி பதிவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த தவறுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| காணி கட்டடங்கள் | 81,666,815 | உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் | 1993ஆம் ஆண்டிற்கு முன்னர் இறுதிக்கணக்கில் சேர்க்கப்பட்ட மேற்குறித்த தொகைக்குரிய ஆவணங்கள் சான்றுகள் நாட்டின் கடந்தகால அசாதாரண சூழ்நிலை காரணமாக அழிவடைந்தமையால் விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது சான்றுகள் கிடைக்கும் பட்சத்தில் தங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் | இவ் விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்க்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 58,896,846 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 21,680,809 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| **வீதவரி** | | |
| சபைக்கு சொந்தமான ஆதனங்களில் தெல்லிப்பளை மற்றும் மல்லாகம் உப அலுவலகங்களிற்கான ஆதனங்களின் பெறுமதியானது 1963 ஆம் ஆண்டிற்கு பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்படாதுடன் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளை சட்டத்தின் 134(i) இற்கமைவாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களிலுள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் என்பனவற்றின் மீது அறவிடப்பட வேண்டிய ரூபா 435,401 ஆதனவரி நிலுவையினை அறவிடுவதற்கு கடந்த 03 வருடங்களாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது. | சபையின் தெல்லிப்பழை, மல்லாகம் உப அலுவலகங்களின் ஆதன வரிகளானது சென்ற ஆண்டு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு இவ்வருடம் முதல் புதிய மதிப்பீட்டின் அடிப்படையிலேயே அதனவரி அறவீடு செய்யப்பட்டு வருகின்றன. காங்கேசன்துறை, மயிலிட்டி உப அலுவலகங்களின் பகுதியளவிலான மீள் மதிப்பீட்டுப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ஆதனவரி நிலுவையினை அறவீடு செய்துகொள்வதற்குரிய நடவடிக்கைகள் எம்மால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வருமான சேகரிப்பு முகாமைத்துவத்தினை வினைத்திறனாக்குவதுடன் அறவிடுவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி என்பன தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபையினால் அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்தாது, வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் ரூபா 49,028,110 நிதியானது நிலையான வைப்பாக உள்ளமை அவதானிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் அபிவிருத்தி வேலைகளிற்கு ஒதுக்கப்படும் நிதிகளானது வேலைகள் திருப்திகரமாக முடிவுற்று கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் வரையிலான காலப்பகுதியில் அவ்நிதிகளானது நடைமுறைக் கணக்குகளில் இருப்பதினால் பாதுகாப்பு கருதியும் அதேநேரம் மேலதிக வருமானத்தினை பெற்றுக்கொள்ளவும் இவ்வகையான நிலையான வைப்பிலிடல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | சபை நிதிகளினை விரையமின்றி உத்தமமட்டத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட 10 மயானங்கள் சபைக்கு உடமையாக்கப் படாததுடன் அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு காணி கட்டடங்களில் உள்ளடக்கப் படாமையினால் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்து மற்றும் மூலதன அரசிறை உதவு தொகை போன்றவற்றின் பெறுமதி குறைத்து வெளிப்படுத்தப் பட்டிருந்தது. | மேற்படி சபைக்கு சொந்தமான மேற்படி மயானங்களிற்கான உடமையினை மாற்றிப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விண்ணப்பங்கள் பிரதேச செயலாளருக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி பதிவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த தவறுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| **ஊழியர் பிணை** | | |
| 2020 மார்ச் 07 ஆம் திகதிய PF/01/2017 (அ) ஆம் இலக்க மாகாண நிதிச்சுற்று நிருபத்திற்கு அமைவாக சபையினால் மீளாய்வாண்டு இறுதிவரை 06 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 90,000 ஊழியர் பிணைப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஊழியரபிணை வைப்புப்பணமானது குறித்த உத்தீயோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்துகொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | பிணைத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |